# உங்கள் குழந்தையின் முதல் பல் மருத்துவ பராமரிப்பு சந்திப்புநேரம்



பல் மருத்துவருடன் அல்லது பல் சுகாதார நிபுணருடனான குழந்தையின் முதல் சந்திப்பு ஒரு நல்ல அனுபவமாக இருப்பதை உறுதி செய்வதற்கு பெற்றோர்களுக்கும் பல் சுகாதார நிபுணர்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. குழந்தைகளுக்கு குறைவான நேர முன்னோக்கு இருக்கும், அதனால் மருத்துவமனையில் என்ன நடக்கும் என்பதற்காக உங்கள் குழந்தையை தயார் செய்யும் போது சந்திப்பு நேரத்துகு சற்று முன்பாக அதை நீங்கள் செய்யவேண்டும்.

## உங்கள் குழந்தைக்கு நம்பிக்கைத் தாருங்கள்

நீங்கள் அவனின் அல்லது அவளின் பற்களை எண்ணும் போது ஒரு கண்ணாடியின் முன்பாக அகலமாகத் திறந்து அதைப் பயிற்சி செய்யுமாறு உங்கள் குழந்தையைக் கேட்கவும். உங்கள் குழந்தையின் ஒரு அருமையான இருக்கை, விளக்கு மற்றும் சோதிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சிறு வாய்க் கண்ணாடி பற்றி சொல்லவும். உங்கள் குழந்தை தனது சகோதரர்கள், பெற்றோர்கள் மற்றும் பிறரிடமிருந்தான சிந்தனையற்ற எதிர்வினைகள் மற்றும கருத்துக்களுக்கு எதிர்வினை செய்யலாம். முதல் பரிசோதனையிலேயே கூட, பல் மருத்துவ ஊழியர் மெதுவாக பற்கள் மற்றும் ஈறுகளை ஒரு உலோகக் கருவியைக்கொண்டு சோதிக்க வேண்டியிருக்கலாம்.

நீங்களோ, அல்லது மற்றொரு உடன் செல்லும் வயது வந்தவர், பல் மருத்துவர் அல்லது பல் சுகாதார நிபுணரிடம் செல்ல நிம்மதியாக இருக்கும்போது, உங்கள் குழந்தை தைரியமாக உணரும். உங்கள் குழந்தை மிகவும் ஆர்வமாக இருந்தால் சந்திப்பு நேரத்திற்கு செல்வதற்கும் முன் பல் மருத்துவமனையைத் தொடர்பு கொண்டு ஊழியருக்குத் தெரிவிக்கவும். ஒன்றாக சேர்ந்து, நீங்கள் உங்கள் குழந்தைக்கான சிறப்பு ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம்.

Norsk Tannvern®
www.tannvern.no

## ஒரு நல்ல அனுபவம்

உங்கள் குழந்தையின் பரிசோதனை ஒரு நல்ல அனுபவமாக இருக்க  செய்ய தங்களால் இயன்ற அளவு சிறப்பாக பல் மருத்துவமனையின் ஊழியர்கள்செய்வார்கள். இது உங்கள் குழந்தையின் வாழ்க்கையின் ஒரு இயற்கையான பகுதியாகும், மற்றும் நம்பகமான உறவாக, ஆயுள்கால அடிப்டையில் இருக்கவேண்டும். குழந்தையின் கவனத்தின் மையமாக இருக்கும். குழந்தையுடன்நேரடியாக பல் மருத்துவர் அல்லது பல் சுகாதார நிபுணர் பேசுவதை பரிசோதனைக்கு குழந்தையுடன் செல்லும் நபர் கவனிப்பார். பல் மருத்துவ ஊழியர குழந்தையிடம் பேசி அதன் சொந்த அடிப்படையில் நம்பகத்தை உருவாக்க இந்த நேரத்தை எடுத்துக் கொள்வார்.

## உங்கள் குழந்தையின் வாய் சுகாதாரத்திற்கான பொறுப்பு

ஆரோக்கியமான பற்கள் மற்றும் ஈறுகளைப் பராமரிப்பதற்கான தகவல் மற்றும் அறிவுறுத்தல்களை குழந்தையுடன் செல்லும் நபர் பெறுவார்.

ஒரு குழந்தையின் வாய் சுகாதாரத்திற்கான பொறுப்பு பெற்றோர்களுடையதாகும். பெற் றோர்கள் அந்தப் பொறுப்பின் மீது எவ்வளவு சிறப்பாக வாழலாம் என்பதற்கான பொறுப்பு நார்வேஜியன் பல் மருத்துவ சேவைக்கு உள்ளது

உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் தொடர்பாக, உங்களுக்கு இருக்கக் கூடிய ஏதேனும் அற்பமான அல்லது மிக முக்கியமான,  கேள்விகளைக் கேட்கவும். தயவுசெயது பல் மருத்துவ ஊழியரிடம் ஏதேனும் உடல்நலக் குறைவு அல்லது நிலைமைகள், மருந்துகள் அல்லது சிறப்பு உணவுக்கட்டுப்பாட்டுப் பிரச்சனைகள்  குறித்துத் தெரிவிக்கவும். குழந்தையின் வாய் ஆரோக்கியம் தொடர்பாக இது மிகவும் முக்கியமானதாக இருக்கலாம்.



முதன்மை பற்களுடன் நிரந்தர பற்களை உருவாக்குவது.

## உங்கள் குழந்தையின் முதல் பல் மருத்துவப் பராமரிப்பு சந்திப்பு நேரத்திற்குப் பிறகு

பரிசோதனைக்குப் பிறகு உங்கள் குழந்தைக்கா நிறைய  நேரத்தை ஒதுக்கவும். என்ன நடந்தது என்பது பற்றி பேசவும் மற்றும் அவன் அல்லது அவள் என்ன அனுபவித்தான் / அனுபவித்தாள் என்பது பற்றி அறிந்து கொள்ள உங்கள்குழந்தையை ஊக்குவிக்கவும். உங்கள் குழந்தை புதிய பதிவுகளை நல்ல வகையில் உட்கிரகித்துக்கொள்ள இது அனுமதிக்கும். சந்திப்பு நேரத்திற்குப் பிறகு உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் பல் மருத்துவர் அல்லது பல் சுகாதார நிபுணரால் உங்களுக்குத் தரப்படும் ஏதேனும் பரிந்துரைகளை பின்பற்றவும்.



## நல்ல பல் ஆரோக்கியத்துக்கான வழிகாட்டி

- வழக்கமான சாப்பாட்டு நேரங்களில ஆரோக்கியமான உணவு – உடலுக்கும் பற்களுக்கு நல்லது
- சாப்பட்டுநேரங்களுக்கு இடையே தாகம் ஏற்படும்போது நீர் – இரவிலும் கூட
- பிரஷ் மற்றும் ஃப்ளோரைடு கொண்டு பல் துலக்குதல் – காலையும் மாலையும்

Norsk Tannvern®
www.tannvern.no

©Norsk Tannvern. Grafisk prod. og design: Trine Suphammer AS. Foto: ©Norsk tannvern og Håkon Størmer.
Oversettelse: Semantix. Økonomisk støtte: Helsedirektoratet. Brosjyren lastes ned gratis fra www.tannvern.no